# சாதனை பெண்களுக்கு விருது வழங்கும் விழா

சென்னை, மார்ச் 7-

சைகோவ்ஸ்கி இசைக் கழகம் சார்பில் சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு, பாடகி சுசீலா, டாக்டர் பிரிதிகா சாரி மற்றும் சுதா ரகுநாதனுக்கு விருது வழங்கப்பட்டது.

சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு, சைகோவ்ஸ்கி இசைக் கழகம் மற்றும் ரஷ்ய கலாசார மற்றும் அறிவியல் மையத்தின் சார்பில், சாதனை பெண்களுக்கு விருது வழங்கும் விழா சென்னையில் நேற்று நடந்தது.

சென்னை, ரஷ்ய கலாசார மையத்தில் நடந்த இவ்விழாவில், திரையிசை பாடகி சுசீலா, நரம்பியல் மருத்துவ நிபுணர் பிரிதிகா சாரி மற்றும் கர்நாடக இசைப்பாடகி சுதா ரகுநாதன் ஆகியோருக்கு விருது வழங்கப்பட்டது.



'சைகோவ்ஸ்கி இசைக் கழகம்' சார்பில் நடந்த விழாவில், சாதனை படைத்த மகளிரை கவுரவிக்கும் விதமாக (இடமிருந்து வலம்) மருத்துவர் பிரிதிகா சாரி, கர்நாடக இசைப்பாடகி சுதா ரகுநாதன் மற்றும் பாடகி சுசிலா ஆகியோருக்கு முன்னாள் நீதிபதி மோகன், ரஷ்யப்பிரதிநிதி அனஸ்தசியா மற்றும் ரஷ்ய கலாசார மைய இயக்குனர் சிமகோவ் கவுரவித்து சிறப்பு செய்தனர்.

விருதுகளை, ரஷ்ய பிரதிநிதி ஸ்மித் அனஸ்தசியா மற்றும் முன்னாள் நீதிபதி மோகன் ஆகியோர் வழங்கினர்.

விருதுகளை வழங்கி ஸ்மித் அனஸ்தசியா பேசுகையில், ''பெண்கள் தினம் என்பது சமூக, பொருளாதார சமத்துவம் பெண்களுக்கு கிடைக்க வேண்டும் என்பதற்காக கொண்டாடப்படுகிறது.

ரஷ்யாவில், பெண்கள் தினத்திற்கு விடுமுறை அளிக்கப்படுகிறது.

இந்த நாளில் ஆண்கள் அனைவரும் தங்களுக்கு தெரிந்த பெண்களுக்கு புன்சிரிப்புடன், நிறைந்த அன்புடன் பூங்கொத்துக்களை கொடுத்து வாழ்த்துக்களை தெரிவிப்பார்கள்.

விருது பெற்ற பெண்களுக்கு எனது வாழ்த்துக்கள்,'' என்றார்.

விழாவில், முன்னாள் நீதிபதி மோகன் பேசுகையில், ''இந்தியர்களும், ரஷ்யர்களும் உறுதியான நட்புறவுடன் பல நிலைகளிலும் தொடர்ந்து அமைதிக்காக செயல் பட்டு வருகின்றனர்.

'இன்று பெண்கள் தினத்தை முன்னிட்டு மூன்று பெண்களுக்கு விருது வழங்கப்பட் டுள்ளது. சுசீலா நான்கு மொழிகளில் தனது பாட லால் பெரும்பாலானவ களை மயங்க வைத்துள் ளார்.

அவரும், அவரது பாட லும் 'பிருந்தாவனமும் நந்தகுமாரனும்' போன்று எப்போதும் நிலை திருக்கும்,'' என்றார்.

விழாவில், ரஷ்ய அறிவி யல் மற்றும் கலாசா மையத்தின் இயக்குன ஸ்தனிஸ்லவ் ஐ.சிமகோவ உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

முடிவில், 'டிவி' நடிகை களின் இசை நிகழ்ச்சி நடந்தது.